1979 மார்ச் 14]

இன்றைய அரசு—பல நல்ல காரியங்களை நடத்தவேண்டும் என்று எண்ணுகின்ற இந்த அரசு—எரிவாயு குழுவினரிடம் இதை எடுத்துக்கூறி காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள எண்ணெயை வெளி கொணருவதற்கானக் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை இதற்காக வற்புறுத்தும்.

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள எண்ணெய் கண்டுபிடிக்கும் எந்திரத்தை டான்சானியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால், அதற்குப் பொறுப்பான மத்திய பெட்ரோலிய அமைச்சர் மீது ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்தச் சபையில் கொண்டுவர இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கண்டனத் தீர்மானம் தேவையில்லை. மீண்டும் வற்புறுத்தினாலே போதும்.

வடபாதிமங்கலத்தில் கரும்புப் பண்ணைக் கழகத்திற்குச் சொந்தமான நிலம்

* வினா எண் 381— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தைச் சேர்ந்த வடபாதிமங்கலம் பகுதியில் உள்ள கழகத்திற்குச் சொந்தமான நிலம் எவ்வளவு?

(ஆ) இதில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக வடபாதிமங்கலம் பகுதியில் 3,910 ஏக்கர் 71 சென்ட் நிலம் உள்ளது,

(ஆ) இக்கழகத்தில் 205 நபர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் 17 நபர்கள் தற்காலிகப் பணியாளர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள்.

1979 மார்ச் 14]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின்கீழ் இருக்கும் இந்த அமைப்பிற்கு 3910 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதிலே வேலை செய்கின்றவர்கள் 205 பேர்கள் நிரந்தரம், 17 பேர்கள் தற்காலிகம் என்று அரசாங்கமே அறிவித்திருக்கிறது. இங்கே காண்ட்ராக்ட் முறை அமுலாக்கப்பட்டு, உண்மையான தகவலை கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அங்கே 4,500 பேர்கள் வேலை செய்கின்றார்கள் என்ற இந்தத் தகவலும் அரசுக்குத் தெரியுமா? இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1-7-77 முதல் 31-7 78 முடிய உள்ள காலத்தில் 773 ஆண்களும், 599 பெண்களும் தினக் கூலி அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய வடபாதிமங்கலம் ஸுகர் பாக்டரியின் ஓனர் சீலிங்கிலிருந்து தப்பிப்பதற்கு ஏராளமான நிலங்களை இதோடு சேர்த்து வைத்திருக்கிறார்கள். என்னுடைய கேள்வி என்னவென்று சொன்னால் அந்த நிலங்களை இந்தக் கார்ப்பரேஷன் எடுத்துக் கொள்ள முறையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவ அவர்களே. அந்த நிலத்தைத் தான் இநதக் கார்ப்பரேஷன் எடுத்து, அதிலே கரும்பு பயிரிட்டு, சர்க்கரை ஆலைக்குக் கொடுப்பது என்கிற வகையில், இந்த நிலங்கள் எல்லாம் இப்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாக உள்ளன.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புப்பண்ணைக் கழகத்தில் 3,918 ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தகவல் சொன்னார்கள். அது அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதையே நம்பி வாழ்ந்த ஆயிரக்கணக்கான அரிசனக் குடும்பங்கள், வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் அவர்களால் பழிவாங்கப்பட்டு, இப்போது நிர்க்கதியாக இருக்கிறார்கள். எனவே, அந்த நிலங்களை இத்தகைய ஏழை அரிசனங்களுக்கும், மற்றுமுள்ள ஏழைகளுக்கும் சொந்தமாக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை, அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 773 ஆண்களும், 599 பெண்களும் அங்கே பணியாற்றுவதாகச் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவதற்கு, தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு அரசு ஆலோசனை வழங்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம், '1 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டபோது, ஒரு தனியாருடைய நிலத்தை எடுத்து மற்றவர்களுக்கு விநியோகம் செய்வதற்குப் பதிலாக நிறுவப்பட்ட ஒரு அமைப்புபோல் தெரிகிறது. ஆகவே, இந்தக் கரும்புப் பண்ணை தேவையா என்பதை இந்த அரசு பரிசீலிக்க இருக்கிறது.

அவினாசி வட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூல்

*வினா எண், 382—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அவினாசி தாலுகா மங்கரசவளையபாளையம், தண்டுக்காரம்பாளையம், பழங்கரை, கைக்காட்டி புதூர் ஆகிய கிராமங்களில் கூட்டுறவு அதிகாரிகள் வண்டி, எருதுகள், சைக்கிள்கள் மற்றும் இதரபொருட்களை ஜப்தி செய்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மங்கரசவளையபாளையம், குமாரபாளையம், மற்றும் கைக்காட்டிபுதூர் கிராமங்களில் ஜப்தி நடவடிக்கைகள், 8-6-78 மேலும் 10-6-78 அன்றும் எடுக்கப்பட்டன.

(ஆ) திருவாளர்கள் கணபதியப்பக்கவுண்டர், பழனிச்சாமி, மாரப்பகவுண்டர் ஆகிய மூன்று பெரிய விவசாயிகள் வீடுகளில் உள்ள எருது, சைக்கிள், மாட்டுவண்டி, கடிகாரம், மேஜை முதலான பொருட்கள் ஜப்தி செய்யப்பட்டன. மூவரும் சிறிய விவசாயிகள் அல்ல.

திரு. சொ ந. பழனிசாமி: கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க முற்படும் அரசு ஊழியர்கள் விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா? வெள்ளம்,